**செய்தி வெளியீடு எண்: 660** **நாள்:14.09.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

இன்று 14.09.2020 மாண்புமிகு பால் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் அறையில் சட்டப்பேரவை கூட்டத் தொடர் நடைபெறுவதை முன்னிட்டு மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் மற்றும் பால் வளத்துறை மானியக் கோரிக்கைகளின் பொழுது சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அனைத்து அறிவிப்புகள் குறித்து, மாண்புமிகு பால் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.டி.ராஜேந்திரபாலாஜி அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பால் கொள்முதலை உயர்த்துதல், கொள்முதல் செய்யும் அனைத்து பாலையும் விற்பனை செய்தல், பால் உபபொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையை உயர்த்துதல், பால் உற்பத்தியாளர்களுக்கு கால்நடை தீவனம் மற்றும் தாது உப்பு கலவை, பால் பணம்பட்டுவாடா ஆகியவை உரிய காலத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்தல் போன்றவைகளை ஆய்வு செய்தார்.

பால்வளத்துறை மற்றும் 25 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் மூலம் நடைபெற்று வரும் முக்கியமான வளர்ச்சி பணிகள், எதிர்காலத்தில் ஆவின் நிறுவனத்தை வளர்ச்சி அடைய தேவையான திட்டங்கள் ஆகியவை குறித்து அலுவலர்களுடன் விரிவாக ஆய்வு செய்தார்.

தமிழகத்தில் பால் உற்பத்தி மற்றும் கொள்முதல் போன்றவற்றில் எவ்வித முறைகேடுகளும் நடைபெறாமல் அதிகாரிகள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும், இடைதரகர்களால் பால் நுகர்வோர் ஏமாற்றப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், தரமான பால் கொள்முதல் செய்வதை அலுவலர்கள் உறுதிபடுத்திட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

மேலும், தமிழகத்தில் நுகர்வோருக்கு தங்கு தடையின்றி 24 மணிநேரமும் ஆவின் பால் மற்றும் பால் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும் மாண்புமிகு பால் மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வின் போது அறிவுறுத்தினார்கள்.

ஆய்வின் பொழுது கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசு முதன்மை செயலாளர் Dr. கே.கோபால், இ.ஆ.ப, பால் வளத்துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணைய நிர்வாக இயக்குநர் Dr. எம்.வள்ளலார், இ.ஆ.ப, கூடுதல் பால் ஆணையர் திரு.கிருஸ்துதாஸ், இணை நிர்வாக இயக்குநர் திரு. மணிவண்ணன், பால்வளத்துறை அலுவலர்கள் மற்றும் ஆவின் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**